|b09291 51perryF (English)

|c09291_000_51perry.xml (Task 178263)

|v1

ஞாயிற்றுக் கிழமை மாலைக் கூட்டம்

|v2

பொது மாநாடு

|v3

ஞாயிற்றுக் கிழமை மாலைக் கூட்டம்

|v4

*அக்டோபர் 3, 2010*

|v5

ஆரோனின் ஆசாரியத்துவம்

|v6

ஆரோனிய ஆசாரியத்துவம்

|v7

ஆசாரியத்துவம்

|v8

மறுஸ்தாபிதம்

|v9

சேவை

|v10

ஆரோனின் ஆசாரியத்துவம்

|v11

மூப்பர் எல். டாம் பெர்ரி

|v12

பன்னிரு அப்போஸ்தலர் குழுமத்தினர்

|v13

நீங்கள் தாங்கியிருக்கின்ற ஆசாரியத்துவம் ஒரு விசேஷ வரமாகும், ஏனெனில் அதைக் கொடுப்பவர் கர்த்தரே. அதை பயன்படுத்துங்கள், அதை மேன்மைப்ப டுத்துங்கள், அதற்கு தகுதியாய் வாழுங்கள்.

|v14

25 ஆண்டுகளுக்கு முன்னால் பொது மாநாட்டில் நான் பேசினபோது எனக்கு அருகில்  நின்று கொண்டிருந்த ஒரு காட்சிப் பொருளை அறிமுகப்படுத்தினே ன். அது என்னுடைய மூத்த பேரன். அண்மையில் அவன் ஆரோனிய ஆசாரிய த்துவத்தைப் பெற்று உதவிக்காரனாக நியமம் செய்யப்பட்டான். அந்த நிகழ்ச் சியின் உரையில் ஆரோனிய ஆசாரியத்துவத்தைப் பெறுவதன் முக்கியத்துவத் தைப் பற்றி அவனுக்குச் சொல்ல எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

|v15

*நான் என்னுடைய பேரனுக்குச் சொன்னேன்:*

|v16

*ஆண்மகனாகுவதை நோக்கிச் செல்லுவதில் உனது பங்கை நீ ஊகிப்பது போலவே, நீயும் பிற வாலிபர்களும் பிரவேசிக்கிற உலகப்பிரகாரமான சூழ்நிலைகள் எனக்கு மகிழ்ச்சியளிப்பதாக இல்லை. உலகில் செல்வாக்கை ஏற்படுத்த வயதாலும் தோற்றத்தாலும் நாங்கள் மூத்தவர்களாயிருந்தாலும், இந்த உலகச் சூழ்நிலைகளில் உனக்கு எதை அனுமதிப்பது என்பதில் நாங்கள் பெரிதும் தோல்வியுற்றோம் என நான் நம்புகிறேன். சம்பிரதாய மதிப்புகளைக் கனம் பண்ணுதலும் புரிந்து கொள்ளுதலும் இல்லாமல் வளர்ந்துள்ள அநேகரிடம் நீ சேரும்பொழுது அது உன்னை இந்த நிலைக்கு கொண்டு வந்து விடும். இவ்வாறாக, நண்பர்களுடைய வற்புறுத்தல் மிக அதிக துன்பங்களைக் கொண்டு வரும்.*

|v17

*நமது வீட்டுக்கு வானொலிப் பெட்டிகள், டேப் ரெக்கார்டர்கள் மற்றும் தொலைக் காட்சிப் பெட்டிகள் ஆகியவற்றை நாம் கொண்டு வந்திருக்கிறோம். ஒவ்வொன்றும் பயன்தரும் பொழுதுபோக்கினை அளிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது, நாம் சந்தோஷமாகக் கேட்பதற்கும் கவனிப்பதற்கும் தகுதியற்றதாக உருவாக்கப்பட்டிருக்கிறது. உண்மையாக, அதிகமாக கீழ்த்தரமாக உருவாக்கப்பட்டுள்ளது. எது சரியானது எது தவறானாது என்று அறியக்கூடிய உங்களுக்குள் இருக்கும் உணர்வை அழிக்கக்கூடிய ஆற்றல் உங்கள் வீட்டிலுள்ள ஒரு சிறு கருவி கொண்டுள்ளது.*(“I Confer the Priesthood of Aaron,” *Ensign*, Nov. 1985, 46).

|v18

*தொழில்நுட்பத்தைத் தவிர.... அநேக காரியங்கள் மாறுகின்றன, அநேகம் அப் படியே இருக்கின்றன. ஆரோனிய ஆசாரியத்துவம் பெற்ற வாலிபர்கள் ரெக் கார்ட் பிளேயர்பற்றி அறிந்திருக்கிறார்களா என கேட்க நான் ஏவப்படுகிறேன். அதைப்பற்றி அறியாதவர்களுக்கு, குடும்ப அறைக்கு நாங்கள் வழக்கமாக செ ன்று, அதை இயக்கி, இசையை நாங்கள் கேட்கும் ஒன்று ஆகும். எல்லா இடத் திற்கும் நாம் அதைத் தூக்கிச் செல்வதை விட அது இருக்கும் இடத்திற்கு செல் வதை நினைத்துப்பாருங்கள்.*

|v19

*எனது பேரன் டெரிக்கு நான் பழைய ஏற்பாட்டிலுள்ள தானியேல் கதையை அடிப்படையாகக் கொண்ட நான்கு பாடங்களை போதித்தேன். (1) அவனு டைய சரீரத்தை ஆரோக்கியமாகவும் தூய்மையாகவும் வைத்துக் கொள்ளவும் (2) அவனுடைய புத்தியை வளர்த்து ஞானமாயிருக்கவும் (3) தைரியமாயிருந் து உலகத்தில் நிறைந்துள்ள சோதனைகளை எதிர்க்கவும் மற்றும் (4) முக்கிய மாக அவருடைய பாதுகாப்பு உனக்குத் தேவைப்படும்போது தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கவும் வேண்டுமென்று நான் அவனுக்கு சொன்னேன்.*

|v20

*இந்த வார்த்தைகளோடு டெரிக்கு என்னுடைய ஆலோசனையை நான் முடித் துக் கொண்டேன். "வேதத்திலுள்ள இந்த கதைகள் ஒருபோதும் பழமையாகா து. நீ ஒரு உதவிக்காரனாக, ஒரு ஆசிரியராக, ஒரு ஆசாரியராக, ஒரு ஊழியக் காரனாக, ஒரு வீட்டுப் போதகராக, ஒரு மூப்பர் குழு தலைவராக அல்லது நீ செய்ய வேண்டிய தேவ அழைப்பு எதுவாக இருந்தாலும் நீ அதை வாசிக்கும் போது அது உனக்கு உற்சாகமூட்டுவதாக இருக்கும். விசுவாசம், தைரியம், உ ன் உடனாளிகள் மேல் அன்பு செலுத்துதல், நம்பிக்கை மற்றும் தேவனில் விசு வாசம் ஆகியவற்றை அவை உனக்கு கற்பிக்கும்"* (*Ensign*, Nov. 1985, 48).

|v21

25 ஆண்டுகளுக்கு முன்னால் நான் கொடுத்த கட்டளைகளுக்கு டெரி விசுவாசமுள்ளவனாக இருந்தான் என அறிக்கை செய்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். பின்பு அவன் மெல்கிசேதேக் ஆசாரியத்துவம் பெற்றான், விசுவாசமாக ஊழியம் செய்தான், இப்பொழுது மூப்பர் குழுமத்தின் தலைவராக சேவை செய்கிறான். அழகான மகளுக்கு தந்தையாகவும் இருக்கிறான்.

|v22

ஒரு நூற்றாண்டின் கடைசி கால்பகுதியில் ஏராளமானவை மாறியிருக்கின்றன. நடந்துள்ள மற்றொரு காரியம், எனது பேரக்குழந்தைகளில் அநேகம்பேர் வளர்ந்து அவர்களுக்கு குழந்தைகளும் இருக்கிறார்கள். இந்த கோடைகாலத்தில், தன்னுடைய அப்பா தனக்கு ஆசாரியத்துவ அதிகாரத்தை அருளும்பொழுது, ஆசாரியத்துவம் தரித்தவர்களோடு வட்டமாக நின்றுகொண்டு என்னுடைய மூத்த கொள்ளுப்பேரனின் தலையில் எனது கைகளை வைக்கும் சிலாக்கியத்தைப் பெற்றேன். இன்று எனது கொள்ளுப்பேரன் எனது அருகில் நிற்காவிட்டாலும் கூட, அவனுக்கும், ஆரோனிய ஆசாரியத்துவம் பெற்ற அனைத்து அற்புதமான இளம் வாலிபர்களாகிய உங்களுக்கும் என்னுடைய குறிப்பினை தெரிவிக்கிறேன்.

|v23

ஆரோனிய ஆசாரியத்துவத்தைப் பெறுவது ஒரு மிக விசேஷமான ஆசீர்வாதமாகும். இந்த பூமியில் ஆசாரியத்துவம் மறுஸ்தாபிதம் செய்யப்பட்டபொழுது மீண்டும் மனிதர்கள் தேவனின் பிரதிநிதியாக செயல்பட அதிகாரம் அளிக்கப்பட்டு பரிசுத்த ஆசாரியத்துவ நியமங்களை அவர்கள் செய்தபொழுது வரலாற்றில் மகத்தான நாளாக பதிவு செய்யப்பட்டது, அது ஆலிவர் கௌட்ரி, பென்சில்வேனியாவின் ஹார்மனியில் உள்ள ஜோசப் ஸ்மித்தின் வீட்டிற்குச் சென்ற 1829 ஏப்ரல் 5 ஆகும். மார்மன் புத்தகமான பூர்வகால குறிப்புகளை மொழிபெயர்ப்புச் செய்யும் அவரது வேலையைப்பற்றி தீர்க்கதரிசியிடம் ஆலிவர் கௌட்ரி விசாரித்தார். தெய்வீக தன்மையுடைய வேலையை உணர்ந்து, மொழிபெயர்ப்பை முடிப்பதற்காக எழுத்தராக இருக்க ஒப்புக் கொண்டார். ஆலிவர் எழுதுவதற்கு ஒப்புக் கொண்ட பிறகு, மொழிபெயர்ப்பு வேலை துரிதமாக முன்னேறியது.

|v24

*1829, மே 15 ஜோசப்பும் ஆலிவரும் 3 நெப்பியை முடித்திருந்தார்கள், உயிர்த்தெழுந்த இரட்சகர் வடக்கு கோளத்தைப் பார்வையிட்ட வரலாறு மற்றும் ஞானஸ்நானத்தைப்பற்றிய அவரது போதனைகள் அவர்களை பூரிப்படையச் செய்தது. 3 நெப்பியை அவர்கள் வாசித்தபோது, அவர்களுடைய இருதயம் ஞானஸ்நானத்தைப் பற்றி ஆவலுறத் தொடங்கியது. எந்த வகையான ஞானஸ்நானம் சரியானது, அந்தப் பரிசுத்தமான, இரட்சிக்கும் நியமத்தைச் செய்வதற்கு யாருக்கு அதிகாரம் உள்ளது? இந்த அடிப்படைக் கோட்பாட்டு கேள்விக்கான பதிலை அவர்கள் தேடினர். அவர்கள் ஜெபத்தின் மூலம் பதில் தேடுவதற்கு முடிவெடுத்தனர். அவர்கள் அருகிலுள்ள இடமான சுயஸ்குஹன்னா நதியின் கரைக்குச் சென்றனர். அவர்கள் தங்கள் இருதயத்தின் உண்மையான உணர்வுகளை வெளிப்படுத்தி ஜெபித்தனர். வானங்கள் அவர்களுக்கு திறக்கப்பட்டது. ஒரு தூதன் தோன்றி, தன்னை யோவான் ஸ்நானகன் என அவர்களுக்கு அறிமுகப்படுத்திக் கொண்டு, பிரதான ஆசாரியத்துவம் தரித்தவர்களான பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி நடப்பதாக ஜோசப்புக்கும் ஆலிவருக்கும் கூறினான்.* (see Joseph Smith—History 1:72).

|v25

*அவனுடைய கைகளை அவர்களுடைய தலையில் வைத்து அவன் சொன்னான்: " தேவதூதர்களின் ஊழியம். மனந்திரும்புதலுக்கேற்ற சுவிசேஷம். பாவமன்னிப்புக்கேற்ற முழுக்கு ஞானஸ்நானம் இவற்றின் திறவுகோல்களை உடையதாயிருக்கிற ஆரோனின் ஆசாரியத்துவத்தை, மேசியாவின் நாமத்திலே என்னுடைய உடன் ஊழியக்காரராகிய உங்களுக்கு அருள்கிறேன். லேவியின் குமாரர்கள் நீதியாய் கர்த்தருக்கு ஒரு காணிக்கையைச் செலுத்தும் பரியந்தம் இந்த ஆசாரியத்துவம் ஒருக்காலும் பூமியிலிருந்து திரும்ப எடுத்துக் கொள்ளப்படமாட்டாது" (கோ. உ 13:1).*

|v26

*பின்பு, ஆலிவர் இந்த நிகழ்ச்சியை இந்த வார்த்தைகளால் நினைவு கூர்ந்தார். " ஆனால் --- ஒரு கணம் மேலும் நினைத்ததால், அவருடைய கரங்களினால் அந்த பரிசுத்த ஆசாரியத்துவத்தை நாங்கள் பெற்றபோது எவ்வளவு சந்தோஷம் எங்கள் இருதயத்தை நிறைத்தது, எவ்வளவு ஆச்சரியத்துடன் எங்களை தலைகு*

*னிய வைத்தது என்பதை நினைக்கிறோம்”* (Joseph Smith—History 1:71, footnote).

|v27

*தேவனின் அதிகாரம் மறுஸ்தாபிதம் செய்யப்படுவதற்காக மனிதகுலம் பல நூற்றாண்டுகளாக காத்திருக்க வேண்டியிருந்த பின்பு, பரிசுத்த ஆரோனிய ஆசாரியத்துவத்தின் வல்லமையும் மகிமையும் பூமிக்கு திரும்ப வந்தது. ஆரோனிய ஆசாரியத்துவம் ஏன் குறைந்த ஆசாரியத்துவம் என நாம் கோட்பாடும் உடன்படிக்கைகளும் பாகம் 107ல் கற்றுக் கொள்கிறோம்.*

|v28

*இரண்டாவது ஆசாரியத்துவம் ஆரோனிய ஆசாரியத்துவம் என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் இது ஆரோன் மற்றும் அவனுடைய சந்ததிக்கு அவர்களுடைய தலைமுறை முழுவதுக்கும் அருளப்பட்டுள்ளது.*

|v29

*“இது குறைந்த ஆசாரியத்துவம் என அழைக்கப்படுவது ஏனென்றால் இது உயர்ந்த அல்லது வெளியரங்கமான நியமங்களை நிறைவேற்ற வல்லமையுடைய மெல்கிசேதேக் ஆசாரியத்துவத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.*

|v30

*“குறைந்த அல்லது ஆரோனிய ஆசாரியத்துவத்தின் வல்லமை மற்றும் அதிகாரம், தேவதூதர்களின் ஊழியம், வெளியரங்கமான நியமங்களை நிறைவேற்றுவது, சுவிசேஷ வெளிப்பாடு, பாவமன்னிப்புக்கேற்ற முழுக்கு ஞானஸ்நானம் மற்றும் உடன்படிக்கைகளையும் கட்டளைகளையும் திறவுகோல்களையும் தாங்கியுள்ளது”. (கோ. உ 107:13--14,20).*

|v31

இளம் வாலிபர்கள் ஆரோனிய ஆசாரியத்துவ வல்லமையையும் அதிகாரத்தையும் பெற்று அவர்களது ஆசாரியத்துவ கடமைகளை கையாள்வதில் தேவனின் பிரதிநிதிகளாக செயல்படுவது மட்டுமன்றி, தேவதூதர்களின் ஊழியம் செய்கிற திறவுகோல்களையும் பெறுகிறார்கள்.

|v32

ஆரோனிய ஆசாரியத்துவமுடைய இளம் வாலிபர்களே, உங்களுடைய விசுவாசத்திற்கேற்றவாறு உங்களுடைய வாழ்க்கையை ஆசீர்வதிப்பதற்கு தேவன் உள்ளார்ந்த உடன்படிக்கை மூலம் கட்டுண்டுள்ளார் என நான் உங்களுக்கு சாட்சியளிக்கிறேன். நீங்கள் பரிசுத்த ஆவியின் எச்சரிக்கையின் சத்தத்திற்கு செவி கொடுத்து அவருடைய வழிகாட்டுதல்களைப் பின்பற்றினால் நீங்கள் தேவதூதர்களின் ஊழியத்தினால் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். இந்த ஆசீர்வாதம் உங்கள் வாழ்க்கையில் ஞானம், அறிவு, வல்லமை மற்றும் மகிமையை அதிகமாக அளிக்கும். இது தேவனால் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட உறுதியான ஆசீர்வாதம் ஆகும்.

|v33

சில மாதங்களுக்கு முன்பு ஒரு தொகுதியில் உபவாச மற்றும் சாட்சிக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. ஆரோனிய ஆசாரியத்துவ ஆலோசகர் ஒருவர் தன்னுடைய சாட்சியைப் பகிர்ந்து கொண்டார். தேவதூதர்களின் ஊழியம் செய்கிற திறவுகோல்களை உடைய ஆரோனிய ஆசாரியத்துவம் தரித்தவர்கள் என்பதன் அர்த்தம் என்ன என்பதுபற்றிய அவரின் சாட்சி எனக்கு ஒரு புதிய மகிழ்ச்சியை கொடுத்தது.

|v34

அக்காலை வேளையில், தொகுதியிலுள்ள ஆரோனிய ஆசாரியர்களிடமிருந்து

பெற்ற அவருடைய அனுபவங்கள் சிலவற்றை இந்த ஆலோசகர் விவரித்தார். அவர் சபைக்கு நடந்து வரும்பொழுது, இரண்டு இளம் உதவிக்காரர்கள் உபவாசக் காணிக்கை உறையுடன் அங்கத்தினர்களின் வீட்டிற்குச் சென்று கொண்டிருப்பதை அவர் கவனித்தார். நேர்த்தியான ஞாயிற்றுக்கிழமை உடையணிந்து அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை மிக கௌரவமாக செய்ததுபற்றி அவர் மனமகிழ்ந்தார். பின்னர் அவர், உடல் மற்றும் மனவளர்ச்சி குன்றியோருக்கு திருவிருந்து அளிப்பதற்காக ஒரு குடியிருப்பு இல்லத்திற்குச் சென்ற இரண்டு ஆசாரியர்களுடன் சேர்ந்து சென்றார். இந்த இரண்டு வாலிபர்களும் அந்த வீட்டிற்குச் சென்றது இது முதல் தருணமாக இருந்தது. ஆசாரியத்துவ செயல்களில் அவர்கள் மிகவும் அக்கறையுடனும் மரியாதையுடனும் செயல்பட்டதை அவர்களது ஆலோசகர் கவனித்தார்.

|v35

பின்னர் அந்த ஆலோசகர் அவருடைய இருதயத்தை ஆழமாகத் தொட்ட ஒரு அனுபவத்தை சுருக்கமாக பகிர்ந்து கொண்டார். ஏனெனில், சரியான தேவதூதர்களின் ஊழியம்--- இயேசு கிறிஸ்துவுக்கு ஒரு உண்மையான ஊழியக்காரனாக இருப்பதன் அர்த்தத்தை அந்த ஆசாரியரில் ஒருவர் எனக்கு நினைவுபடுத்தினார். சபையினருக்கு தண்ணீர் பரிமாறிக் கொண்டிருந்த இளம் ஆசாரியன் மனவளர்ச்சி குறைபாடுள்ளவனாக காணப்பட்ட ஒரு மனிதனிடத்தில் வந்தான். தட்டிலிருந்து கிண்ணத்தை எடுத்து குடிக்க முடியாதபடி அந்த மனிதருடைய நிலைமை அவரை தடுத்தது. அந்தச் சூழ்நிலையை உடனடியாக அந்த இளம் ஆசாரியன் புரிந்து கொண்டான். அவன் குடிக்க கூடிய நிலையில் அந்த மனிதனுடைய தலைக்குப் பின்னால் அவனுடைய இடது கையை வைத்தான். தன்னுடைய வலது கையால் தட்டிலிருந்து கிண்ணத்தை எடுத்து, அந்த மனிதனுடைய உதட்டருகில் பொறுமையாக மெதுவாக உயர்த்தினான். ஒரு பாராட்டுதலின் வெளிப்பாடு அந்த மனிதனுடைய முகத்தில் தெரிந்தது --- ஒருவருக்கு ஊழியம் செய்யும்போது ஒருவர் வெளிப்படுத்துவது, இந்த அற்புதமான இளம் ஆசாரியன் தனக்கு ஒதுக்கப்பட்ட பணியான, ஆசீர்வதிக்கப்பட்ட தண்ணீரை சபையின் பிற அங்கத்தினர்களுக்கு பரிமாறுவதைத் தொடர்ந்தான்.

|v36

*அந்த ஆலோசகர், அந்த நெகிழ்ச்சியான நேரத்தில் அவர் அடைந்த உணர்வுக ளை தனது சாட்சியில் வெளிப்படுத்தினார். தான் ஆனந்தத்தால் அமைதியாக அழுததாக அவர் சொன்னார். ஆரோனிய ஆசாரியத்துவத்தைக் கொண்டுள்ள அக்கறையுள்ள கீழ்ப்படிதலுள்ள இந்த இளம் வயதினரின் நல்ல கரங்களில் ச பை உள்ளது என்பதை அவர் அறிவார்.*

|v37

*தன்னுடைய நெறிமுறையில் சுத்தமாகவும், உண்மையாய் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்பவனுமாகிய ஒரு இளம் மனிதனை எனக்குத் தாருங்கள். அவனு டைய ஆசாரியத்துவத்தை மேன்மைப்படுத்தக்கூடிய, ஈகிள் ஸ்கவுட் மற்றும் தேவனுக்குரிய கடமை விருதினைப் பெற்ற ஒரு இளம் மனிதனை எனக்கு தா ருங்கள். இளம் வேதபாட வகுப்பில் பட்டம் பெற்றவனும் மார்மன் புத்தகம் பற்றிய ஆழமான சாட்சியை உடையவனுமாகிய ஒரு இளம் மனிதனை எனக் குத் தாருங்கள். அப்படிப்பட்ட இளம் மனிதனை எனக்கு தந்தால், தேவனின் ஊழியக் களத்திலும் அவனுடைய வாழ்நாள் முழுவதிலும் அற்புதங்களைச் செய்யக் கூடிய இளம் மனிதனை உங்களுக்கு நான் தருவேன்.”* (To the Youth of the Noble Birthright, “*Ensign*, May 1986, 45)

|v38

*இந்த மகத்துவமான இளம் ஆண்கள் மற்றும் பெண்களின் பெற்றோர்களே, உ ங்கள் குழந்தைகளுக்கு பரிசுத்த ஆசாரியத்துவத்தின் கோட்பாடுகளை கற்றுக் கொடுக்கும் பரிசுத்தமான பொறுப்புக்களை உங்களுக்கு நாங்கள் கொடுக்கி றோம். கர்த்தரின் நித்திய ஆசாரியத்துவத்தின் ஆசீர்வாதங்களை பெற்றுக் கொ ள்வதற்கும் இந்த ஆசீர்வாதங்களுக்கு தகுதி பெற தனித்தனியாக என்ன செய்ய வேண்டும் என்றும் உங்கள் குழந்தைகள் இளம் வயதிலே கற்றுக் கொள்ள வே ண்டும்.*

|v39

*ஆயர்களே, ஆரோனிய ஆசாரியத்துவம் உடைய இளம் வயதினருக்கு தலை*

மை தாங்கவும் ஆலோசனைக் கூட்டத்தில் அவர்களுடன் இருந்து அவர்களுக்கு ஆசாரியத்துவத்தின் கடமைகளைப்பற்றி கற்றுக் கொடுப்பதற்கும் நீங்கள் ஆசாரியத்துவ திறவுகோல்களைக் கொண்டுள்ளீர்கள். ஒவ்வொரு இளம் வயதினரும் ஆரோனிய ஆசாரியத்துவத்தைப் பெற்றுக் கொள்ள தகுதியாகவும், ஆசாரியத்துவம் தரித்தவனாக அவனுக்கு இருக்கின்ற பொறுப்புகளையும் ஆசீர்வாதங்களையும் புரிந்துகொள்வதையும் தயவுசெய்து உறுதிப்படுத்துங்கள். முக்கியமான நியமங்களை இப்பொழுது அவனுக்கு கொடுப்பதால் ஆசாரியத்துவத்தை மேன்மைப்படுத்த கற்றுக் கொள்ள அவனுக்கு உதவுங்கள். பிறருக்கு சேவை மற்றும் ஊழியம் செய்யவும் அவனுக்கு உதவியாயிருங்கள்.

|v40

இளம் ஆண்கவே, உண்மை மற்றும் நீதியின்மேல் அஸ்திபாரமிட்டு உங்கள் வாழ்க்கையை நீங்கள் கட்டுவதற்கு நான் அழைக்கிறேன். இந்த வாழ்க்கையின் நெருக்கடிகளில் நிலை நிற்கவும் சதாகாலமும் நிலைத்து நிற்கவும் இந்த ஒரே அஸ்திபாரம் மட்டுமே இருக்கிறது. நீங்கள் தரித்துள்ள ஆசாரியத்துவம் ஒரு விசேஷ வரமாகும். ஏனெனில் அதைக் கொடுப்பவர் கர்த்தரே. அதை பயன்படுத்துங்கள், அதை மேன்மைப்படுத்துங்கள், அதற்கு தகுதியாய் வாழுங்கள். அதனுடைய வல்லமையைப்பற்றி எனக்கு சிறப்பான மற்றும் தனிப்பட்ட சாட்சி உண்டு என்பதை நீங்கள் அறியவேண்டுமென நான் விரும்புகிறேன். எனது வாழ்வில் அநேக வழிகளில் அது என்னை ஆசீர்வதித்துள்ளது.

|v41

இந்த பெரிய ஆசீர்வாதத்தை நீங்கள் மகிமைப்படுத்த வேண்டுமென இந்நாளில் நீங்கள் தீர்மானித்துக் கொள்ள உங்களை நான் அழைக்கிறேன். ஆரோனிய ஆசாரியத்துவ அலுவலில் --- உதவிக்காரனாக, ஆசிரியராக மற்றும் ஆசாரியராக முன்னேற ஆயத்தப்படுங்கள். பெரிய ஆசீர்வாதமான மெல்கிசேதேக் ஆசாரியத்துவத்தைப் பெற்றுக்கொள்ள உங்களை ஆயத்தப்படுத்துங்கள். முழுநேர ஊழியக்காரனாக நீங்கள் சேவை செய்வதற்கு முன்பு அதைப் பெற்றுக்கொள்ள நீங்கள் தகுதியாக வேண்டும். அவருடைய சேவைக்கு உங்களை ஆயத்தப்படுத்த தேவன் விரும்புகிறார். முக்கியமாக, அவருடைய சுவிசேஷத்தை உலகிற்கு அறிவிக்கும் மிகப் பெரிய பொறுப்பை நீங்கள் கொண்டுள்ளீர்கள். அவருடைய பரிசுத்த ஆசாரியத்துவத்தை பெற்றுக்கொள்ள நீங்கள் ஆயத்தப்படும்

பொழுது உண்மையாகவே உங்கள் தலையின்மேல் ஆசீர்வாதங்களை அவர் பொழிந்தருளுவார் என நான் உங்களுக்கு வாக்குத்தத்தமளிக்கிறேன். இந்த சாட்சிகளை நமது கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்கு நான் சொல்கிறேன். ஆமேன்.

|v42

லியஹோனா

|v43

நவம்பர் 2010